# **Sub Court, Eraniel**

Case No. O.S.113/2021
**Date:** 06.07.2023.

பி.வா.சா.1 - திரு. குமரேசன்
**சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.**
**குறுக்கு விசாரணை**

வாதி அவர் மீது நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததற்காக இந்த வழக்கை போட்டுள்ளார். அந்த புகாரின் குற்ற எண். 32/2021. உயர்நீதிமன்ற உத்தரவின்படி ஜாகீர் உசேன் என்பவர் கடைக்கு மின் இணைப்பை சீர் செய்வதற்காக நாங்கள் சென்றபோது வாதி மின் இணைப்பு பெட்டியை பூட்டி வைத்திருந்தார். மின் இணைப்பை கொடுப்பதற்கு வாதியும் அவருடைய மகனும் சம்மதிக்கவில்லை. மற்றும் வாதியின் மகனும் அவருடைய நண்பர்களும் எங்களை தகாத வார்த்தைகளால் பேசினார்கள். அறிவிப்பை வாதி தரப்பில் வாங்க மறுத்ததால் மின் இணைப்பு பெட்டியில் பலகையில் ஒட்டினோம். எங்களை மின் இணைப்பை சரிசெய்ய விடாமல் தடுத்ததால் பாதுகாப்புக் கேட்டு புகார் கொடுத்தோம். உயர்நீதிமன்ற உத்தரவு 11.02.2021 ம் தேதி பிறப்பிக்கப்பட்டது. 18.02.2021 ம் தேதி ஜாகீர் உசேன் அந்த உத்தரவு நகலை இணைத்து எங்கள் அலுவலகத்தில் மனுக் கொடுத்திருந்தார். அந்த உத்தரவு எங்களுக்கு 15.02.2021ம் தேதியே கிடைத்துவிட்டது என்றாலும் ஆனால் அதன்பிறகு நாங்கள் அந்த பக்கமே போகவில்லை என்றாலும் சரியல்ல. வாதிக்கு 3 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் எண்கள் 939, 268, 1038. ஜாகீர் உசேன் இருந்த கட்டிடத்திற்கு கொடுக்கப்பட்ட மின் இணைப்பு எண். 939. வாதிக்கும், ஜாகீர் உசேனுக்கும் நடந்த வழக்கில் 25.02.2021ம் தேதி தீர்ப்பு வந்தது என்றால் அது தாமதமாகத்தான் எங்களுக்கு தெரியும். 25.02.2021ம் தேதி அந்த விவரம் எங்களுக்கு தெரியாது. அவ்வாறு தீர்ப்பு வந்த விபரத்தை எங்களுக்கு தகவல் கொடுத்தது ஜாகீர் உசேன். 25.02.2021ம் தேதி மாலை 05.10 மணிக்கு நாங்கள் வாதியின் இடத்திற்கு சென்றோம். வாதி வீட்டில் நுழைவு வாயிலில் பெரிய கேட் இருந்தது என்றால் சரிதான். காலிங் பெல்லை அடித்தது எங்கள் அலுவலக ஊழியர் ஒருவர். கேட்டை யாரும் வந்து திறந்துவிடவில்லை. கேட் வெறுமனே சாத்தி இருந்தது. தள்ளியவுடன் திறந்துவிட்டது. அதன்பிறகு நாங்கள் உள்ளே சென்றோம். கேட்டை வாதியின்

மனைவி வந்து திறந்துவிட்டார் என்றால் சரியல்ல. மின் இணைப்பு பெட்டிக்கும் தாண்டி 6, 7 அடி தூரத்தில் வாதியின் வீடு இருந்தது. உதவி செயற்பொறியாளரும் எங்களுடனேயே கேட்டை கடந்து உள்ளே வந்துவிட்டார். நாங்கள் உள்ளே வந்தபிறகும் மின் இணைப்பு பெட்டியை பார்வையிடாமல் நேரடியாக வாதியின் வீட்டிற்கு போனோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 புகைப்படங்களில் முதல் மூன்று புகைப்படங்களை தவிர மற்ற புகைப்படங்களில் நான் இருக்கிறேன் என்றால் சரிதான். நாங்கள் வாதியின் வீட்டிற்கு நேரடியாக சென்றவுடன் வாதியின் மனைவியும் மகனும் மின் இணைப்பு பெட்டி இருக்கும் இடத்தை காட்டி அந்த இடத்திற்கு போகுமாறு சொன்னார்கள் என்றால் சரியல்ல. மின் இணைப்பு பெட்டிகளில் வெளி பூட்டு இல்லை என்றால் வெளியில் பார்வைக்கு தெரியக்கூடிய பூட்டு கிடையாது. கதவின் உள்பக்கமாக பூட்டக்கூடிய பூட்டு போட்டு பூட்டியிருந்தது. மின் இணைப்பு பெட்டிக்கு பூட்டே கிடையாது என்றால் சரியல்ல. அன்றைய தினம் மீட்டர் பெட்டியில் அறிவிப்பு ஒட்டுவதற்காக புகைப்படம் எடுத்தோம். அந்த புகைப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்ய தயாராக இருக்கிறோம். வாதியின் மனைவி மற்றும் மகனிடம் நாங்கள் பார்க்க வந்தது மின் இணைப்பு எண். 939 கிடையாது என்றும் மற்ற இரண்டு மின் இணைப்புகள் என்றும் சொன்னோம் என்றால் சரியல்ல. ஜாகீர் உசேனின் கடைக்கு உள்ள மின் இணைப்பை சீர் செய்வதற்கு மின் இணைப்பு பெட்டியை திறந்து காட்டாததால் அறிவிப்பு ஒட்டினோம். 25.02.2021ம் தேதி மாலை 05.00 மணிக்கு உள்ளே சென்றதற்கு பிறகு அறிவிப்பு ஒட்டினோம். அன்றைய தினம் காலை எங்கள் அலுவலக ஊழியர் மூலம் வாதிக்கு அறிவிப்பு கொடுத்தோம். அதை வாதி பெற்றுக் கொள்ளவில்லை. மறுத்துவிட்டார். அறிவிப்பை கொண்டு போன அலுவலக ஊழியர் டேவிட் என்ற களப்பணியாளர். களப்பணியாளர் கொண்டு போய் வாதி வாங்கவில்லை என்று சொல்லும் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு ஒரு அறிவிப்பை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் வாதி வீட்டிலேயே இல்லை என்றால் சரியல்ல. மின் இணைப்பு பெட்டியை தவிர வேறு எதையும் நாங்கள் புகைப்படம் எடுக்கவில்லை. சம்பவ இடத்தில் வாதி இருந்ததை காட்ட தடயப்பொருள் எதுவும் இல்லை. வாதி தற்போது மணவாளக்குறிச்சி கூட்டுறவு சங்க தலைவர் என்றால் சரிதான். அந்த சங்கத்திற்கு மணவாளக்குறிச்சி, சேரமங்கலம், குளச்சல் ஆகிய

மூன்று இடங்களில் கடைகள் உள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. நாங்கள் வாதியின் வீட்டிற்கு வந்தது அவருக்கு தெரியாது என்றாலும் அப்போது அவர் வீட்டில் இல்லை என்றாலும் சரியல்ல. வாதி தரப்பினர் யாரும் எங்களை தடுத்ததாகவோ, தாக்கியதாகவோ எந்த தடயமும் புகைப்படமும் எங்களிடம் இல்லை என்றால் அவர் தகராறு செய்தது உண்மை. நாங்கள் வேண்டுமென்றே வாதி மீது பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. அந்த பொய்ப் புகார் காரணமாக பொதுமக்கள் வாதியை தவறாக நினைத்து கேவலப்படுத்த வைத்தோம் என்றால் சரியல்ல. 13.01.2020 ம் தேதி மின் பெட்டியை பூட்டி வைத்ததால் மின் பயனீட்டு அளவை கணக்கிட முடியவில்லை என்று சொல்வதற்கு ஆவணம் உள்ளதா என்று அலுவலகக் கோப்பைப் பார்த்துதான் சொல்ல முடியும். அவ்வாறு கணக்கிட முடியாத மின் இணைப்பு எண். 939. இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பயனீட்டு அளவு கணக்கீடு செய்யப்படும். ஆனால் மின் இணைப்பு எண். 939 க்கு அவ்வாறு கணக்கீடு செய்ய முடியவில்லை. இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மின் கட்டணம் அந்த மின் இணைப்பிற்கு செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 13.01.2020 முதல் எந்த காலம் வரை பணம் கட்டவில்லை என்று அலுவலக கோப்பைப் பார்த்து தான் சொல்ல முடியும். இரண்டு மாத காலத்திற்கான தொகை செலுத்துவதற்கான 20 நாட்கள் காலகட்டம் முடியும் போது 20 வது நாள் மின் இணைப்பை துண்டித்து விடுவோம். அவ்வாறு மின் இணைப்பு எண். 939 ஐ எத்தனை முறை துண்டித்தோம் என்று கோப்பைப் பார்த்துதான் சொல்ல முடியும். வாடகைதாரருக்கும் உரிமையாளருக்கும் உள்ள பிரச்சனையில் நாங்கள் தலையிட முடியாது என்றால் நாங்கள் தலையிடவில்லை. நாங்கள் வாரியம் என்பதால் பிரிவு 80 ன் கீழான அறிவிப்பு கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. நாங்கள் ஜாகீர் உசேனுக்கு ஆதரவாக செயல்படுகிறோம் என்றால் சரியல்ல.